மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு வனக்கோட்டத்திலும் ஆண்டு ஒன்றுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமங்களின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மாவட்ட வன அலுவலர்கள், உரிய கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு, உரிமங்களை வழங்குகிறார்கள்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, திருட்டுத்தனமாக வேட்டையாடுவதால் நமது நாட்டிலுள்ள புலியினம் அடியோடு அறவே அற்றுப் போய்விட்டது என்பது உண்மையா ? அதைத் தடுக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படிச் சொல்வது தவறு. வேட்டையாடுவதற்கு உரிமங்கள் வழங்கப்பட வேண்டும். உரிமங்கள் பெறாமல் யாராவது வேட்டையாடினால் அவர்கள் தண்டிக்கப் படுவார்கள்.

Pay of employees of Electricity Department

* 155 *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the system and calculations that are adopted for fixing pay scales of the staff of the Mayavaram-Mannargudi-Tiruvarur Electrical Undertakings when it was acquired by the State Electricity Board;

(*b*) whether the arrears have been paid to the staff ; and

(*c*) whether any petition has been received for the payment of arrears and for reconsideration of scales of pay that have been fixed?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) தமிழ்நாடு மின்வாரியத்தின்கீழ் அனுமதிக்கப்படத்தக்க மொத்த ஊதியத்தில் இயன்ற வரையில் இழப்பு ஏதும் ஏற்படாதவண்ணம் பணியாளரது சம்பளம் நிச்சயிக்கப்படுகிறது.

(இ) வாரியத்தின் திருத்தப்பட்ட சம்பள விகிதங்கள் வேண்டாம் என அறிவித்த சில பணியாளர்களைத்தவிர, மற்ற பணியாளர்களுக்கு நிலுவைச் சம்பளங்கள் வழங்கப்பட்டுவிட்டன.

(உ) ஆம்.

Dr. H. V. HANDE : May I know whether the main grievance, i.e., the anomaly pointed out in the absorption orders passed by Government, whether that has been properly rectified? At the time of merger, they have passed an order. That anomaly was exposed and pointed out by the Union concerned. With regard to fixation of pay, the Board has to take the total emoluments, pay and D.A. for the employees' service under the licensee. Has this been brought to the attention of Government? Have the Government rectified it? This has been pending for a long time?

1972 சனவரி 29]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, டோட்டல் எமால்யூல்மன்ட்ஸ் குறையாத அளவுக்கு செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்கிறேன். அசிஸ்டென்டாக தனியாரிடத்தில் ஒருவர் வேலை பார்க்கும்போது, ரூ. 255-இருந்தது என்று சொன்னால், மின்சார வாரியத்திற்கு வந்ததற்குப் பிறகு ரூ. 255-பெற்றவர்கள் ரூ. 309-பெறுகிறார்கள். மொத்தத்தில் எந்த அளவிலும் குறைக்கப்படவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, மாயவரம்—திருவாரூர் எலெக்டிரிசிடி அண்டர்டேக்கிங்கை அரசு ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு சில சிப்பந்திகளுக்கு சம்பள பாக்கி வரவில்லை என்று சொல்கிறார்களே, அது உண்மையா? அதற்கு என்ன நடவடிக்கை அரசு எடுத்து இருக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: நான் ஏற்கெனவே இரண்டாம் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது சொல்லியிருக்கிறேன். வாரியத்தின் திருத்தப்பட்ட சம்பள விகிதங்கள் வேண்டாம் என அறிவித்த சில பணியாளர்களைத் தவிர மற்ற பணியாளர்களுக்கு நிலுவைச் சம்பளங்கள் வழங்கப்பட்டுவிட்டன.

சிலைகள் திருட்டு.

* 156 வினா—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டின் கோயில்களில் உள்ள கலை நுணுக்கம் வாய்ந்த சிலைகள் திருடப்பட்டு வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுவதை தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைமுன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, இந்த சிலைகளைத் திருடுவதற்காக ஒரு தனிக்கூட்டமே இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அவற்றை உடனடியாக கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா? இப்படிப்பட்ட நுணுக்கமான சிலைகள், அதிகம் விலையுயர்ந்த சிலைகள்—சில சிலைகள், ரூ. 75 லட்சம் வரைகூட விற்கிறது என்று சொல்கிறார்கள்—ஆகியவற்றை அரசாங்கமே . . .

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: கேள்வியைக் கேளுங்கள்.

---

* 120—121-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டு உள்ளது.